விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 231 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




மக்கள் கிளர்ச்சியையடுத்து

## பதவியை இராஜினமாச் செய்த பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா

### நாட்டை விட்டும் வெளியேறினார் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம்



(டாக்கா)

மக்கள் கிளர்ச்சியின் எதிரொலியாக, பங்களாதேஷ் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்த ஷேக் ஹசீனா லண்டனுக்கு புறப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது.

15

நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ஷக்கள்

## ரணிலுடன் கைகோர்த்து தமக்கு பாதுகாப்பைத் தேடுகின்றனர் - சஜித்



(நுவரெலியா)

நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற ராஜபக்ஷ தரப்பினர் ஜனாதிபதியோடு கைகோர்த்துத் தமக்கு பாதுகாப்பான இடத்தைத் தேடி வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் மாநாடு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஹங் குராங்

02

தவராசா | அரியநேந்திரன்

## தமிழ்ப் பொது வேட்பாளர்

### அறிவிப்பதில் தொடர்ந்து இழுபறி





(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளராக கே.வி.தவராசா அல்லது பா.அரியநேந்திரனை களமிறக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் யார் என்ற இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு தொடர்பாக ஏழு அரசியல் கட்சிகளும் ஏழு சிவில் சமூக அமைப்புகளும் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி நேற்று நண்பகல் முதல் பேச்சுவார்த்தை நடத்தின.

முன்னதாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்குவதற்காகப் பல பெயர்கள் பரிசீலிக்

02

## மானிப்பாயில் கசிப்புடன் சந்தேக நபர் கைது



15

தும்பளையில் குடும்பஸ்தர்

## வீட்டுக் கிணற்றில் சடலமாக மீட்பு

(கரணவாய்)

தும்பளை மாதா கோவில் வீதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

செபஸ்தியாம்பிள்ளை டேவிட் உதயராசா (வயது-47) என்ற இரண்டு பிள்ளைகளின்

15

குற்றங்கள் மேற்கொள்ள

## மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் ஏழாலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் குற்றச்செயலினை மேற்கொள்வதற்காகப் பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த 3 வாள்கள், காலணிகள், முக மூடிகள் மற்றும் மேல் அங்கிகள் என்பன நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

ஏழாலை மேற்கு, ஏழாலை, புளியங்கிணற்றடி என்ற இடத்திலுள்ள பற்றைக்குள் இருந்தே மேற்குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலி

15

## தேர்தல் சட்ட மீறல்கள் 60 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 60 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அதன் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்

15

தபால் மூல வாக்களிப்பு

## விண்ணப்பம் ஏற்கும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால

15

## ரணிலுடன் டீல் அரசியல் கிடையாது இன்று வேட்பாளரை அறிவிப்போம்

### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் கட்சிகளை பிளவுபடுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்தவர். ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் எவ்வித டீல் அரசியலும் கிடையாது. கட்சியை பாதுகாத்துக் கொள்வதற்காகவே சிறந்த தீர்மானத்தை எடுத்தோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்

15

## கட்டுப்பணம் செலுத்தியோர் 17ஆக உயர்வு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 17 வேட்பாளர்கள் இதுவரை தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டிய இலங்கை மீனவர்களுக்கு 27 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம்

(கொழும்பு)

வெளிநாட்டு மீன்பிடி கப்பலுக்கான உரிமம் இல்லாமல் சீஷெல்ஸ் நாட்டின் கடல் எல்லையில் மீன்பிடித்த குற்றத்திற்காக இலங்கை மீனவர்களுக்கு 27,000 அமெரிக்க டொலர் அபராதத்தை சீஷெல்ஸ் உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது. நீதிமன்ற அறிக்கையின்படி, சம்பத் 16 எனும் மீன்பிடி கப்பலின் தலைவரான மாவல்ல கட்டாடிலாகே பத்மசிறி (வயது 58) மற்றும் அவரது குழுவினர் ஜூன் 9ம் திகதி கைது செய்யப்பட்டனர். சீஷெல்ஸின் பிரத்தியேக பொருளாதார வலயத்தின் பிரதான தீவான மாஹேயிலிருந்து தென்கிழக்கே சுமார் 94 கடல் மைல் தொலைவில் அவர்கள் கைதாகினர். வெளிநாட்டு மீன்பிடிக் கப்பலுக்கு சீஷெல்ஸ் நாட்டில் வழங்கப்படும் மீன்பிடி உரிமத்தை அவர்கள் கொண்டிராத காரணத்தால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை 29 அன்று தலைமை நீதிபதி தனது தீர்ப்பில், குற்றம் சாட்டப்பட்டவர் முதலில் கிடைத்த வாய்ப்பில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் குறைந்தபட்ச தண்டனையை வழங்கியதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் தங்கள் நாட்டுக் கடற் பரப்பில் பிடிக்கப்பட்டு உறை நிலையில் வைக்கப்பட்டிருந்த மீன்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையை சீஷெல்சுக்கு பறிமுதல் செய்யவும் நீதிபதி உத்தரவிட்டார். (ம-7)

# மருத்துவர் அர்ச்சுனா சிறையில் உணவு தவிர்ப்பு

மருத்துவர் அர்ச்சுனா சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுமதியின்றி நுழைந்து முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் மகப்பேற்று வைத்தியர் அறைக்குள் நுழைந்து புகைப்படம் மற்றும் காணொளி எடுத்தமை தொடர்பிலேயே அர்ச்சுனா கைதாகியிருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு, நகர்த்தல் பத்திரம் ஊடாக நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நிராகரிக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் நீடித்து, மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதே நேரம் அனுமதி இன்றி வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்தியருடன் காணொளி பதிவுகளை மேற்கொண்ட இருவரையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நொச்சியாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எஹதுவாகம பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் காயமடைந்து நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பகஹவெவ, நொச்சிகம பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது தோட்டத்தை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாக்கச் சென்றுவிட்டு வீடு திரும்பும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# தாய் அறிவுரை கூறியதால் மகிந்தவை கைவிட்டேன்

## ரோஹித அபே குணவர்தன எம்.பி

(கொழும்பு)

தனது தாய் கூறிய அறிவுரையால் இம்முறை மகிந்த ராஜபக்ஷவை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்ததாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் மிகவும் விசுவாசியான அவர் இம்முறை அவரை கைவிட்டு எவரும் எதிர்பார்க்காத வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் தனது இந்த முடிவிற்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில்,

என் அம்மாவுக்கு 87 வயது. கடந்த 2015ஆம் ஆண்டு மகனே, மிஸ்டர் மகிந்தவை விட்டுவிட்டு வீட்டுக்கு வராதே என்று சொல்லியிருந்தார்.

ஆனால் இந்த முறை, மகனே, போய் ரணிலை ஜனாதிபதியாக வெற்றிபெற செய்வதற்கான வேலையைச் செய்யுமாறு கூறினார். அதனால்தான் இந்த முடிவை எடுத்தேன் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரணிலுடன்...

கெத்தையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

இன்று பல்வேறு தரப்பினரும் நாடு முழுவதும் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். திருடர்களைப் பிடிப்பதாகச் சொன்னாலும் திருடர்களுடன் டீல் போட்டுள்ளனர்.

ராஜபக்ஷக்களுடன் கைகோர்த்து அரசியல் செய்தவர்கள் தற்போது ஒருவர் பின் ஒருவராக ஜனாதிபதியுடன் கைகோர்த்து வருகின்றனர்.

மக்களே இவர்களின் முகங்களை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அடைக்கலம் தேடியே ரணிலோடு இணைகின்றனர்.

ராஜபக்ஷ தரப்பினர் ஜனாதிபதியோடு கைகோர்த்து தமக்கு பாதுகாப்பான இடத்தை தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் இந்த திருடர்களுக்கு இடமில்லை.

மாளிகை கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, இந்த நாட்டின் விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளிகள், அரசு ஊழியர், நடுத்தரக் குடும்பங்களின் பிள்ளைகள் சர்வதேச தரத்திலான தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெறுவதற்கு வழிவகை செய்வோம்.

ஐக்கிய மக்கள் சக்தி இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. இரத்தினம் ஜெயராமன்
( முன்னாள் C.T.B சாலைப் பரிசோதகர் )

Congratulations

அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக 03.07.2024 அன்று வடமாகாண மேல் நீதி மன்ற நீதிபதி உயர் திரு. D.S சூசைதாஸ் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் காரைநகர் மத்தியஸ்த சபையில் 12 வருடங்களுக்கு மேல் உப தவிசாளராகவும், உறுப்பினராகவும் ஜன்ஸ்ரீன் சனசமூக நிலையப் பொருளாளராகவும், காரை தெற்கு கிராம சக்தி மக்கள் சங்கத் தலைவராகவும் செயலாற்றி வருகின்றார்.

மேலும் இவர் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், தோப்புக்காடு சிறி சுப்பிரமணிய சுவாமி கோவில், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், விசுவமடு ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் சம்மேளனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராவார். மற்றும் காரைநகர் சைவமகாசபை, காரைநகர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினராகவுள்ளதுடன் காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், காரை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் முன்னாள் நிர்வாக உறுப்பினருமாவார். அவர் பல ஆண்டு வாழ்ந்து சமூக சேவையாற்ற இறைவனை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(1629)

ஜன்ஸ்ரீன் சன சமூக நிலைய நிர்வாக
உறுப்பினர்களும் பொதுமக்களும் தோப்புக்காடு காரைநகர்.


## தமிழ்...

கப்பட்ட நிலையில் நேற்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கே.வி. தவராசா ஆகியோரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இரண்டு பேரில் ஒருவர் நேற்று பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், நேற்று மாலை வரையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை.

மேலும் பொது வேட்பாளரைக் களமிறக்குவதிலுள்ள சாதக பாதகங்களை பற்றி ஆராயப்பட்டது.

முக்கியமாக, நிதி விவகாரங்கள் பற்றி ஆராயப்பட்டது.

பொதுவேட்பாளருக்காக இதுவரை ஒரு சதமேனும் திரட்டப்படவில்லை. பொதுவேட்பாளராக களமிறங்குவதெனில் அதற்கான தயார்படுத்தல்கள் சரியாக செய்யப்பட்டிருக்க வேண்டுமென இருவருமே நிபந்தனை விதித்துள்ளனர்.

பொதுவேட்பாளர் என பத்திரிகையில் அறிவித்து விட்டு, தேர்தலை எதிர்கொள்ள முடியாதென இருவரும் குறிப்பிட்டுள்ளனர். வடக்கு கிழக்கு தழுவிய முழு அளவிலான பிரச்சாரம் செய்யப்பட வேண்டுமெனில் பெருமளவு நிதி தேவை.

பொதுவேட்பாளரை தெரிவு செய்து அறிவித்தால், புலம்பெயர் தேசங்களிலிருந்து கோடி கோடியாக பணம் திரளுமென பொதுவேட்பாளர் திட்டத்தை முன்னெடுத்த 7 தனிநபர்கள், சுரேஸ் பிரேமசந்திரன் உள்ளிட்டவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். எனினும், தற்போது நிதி விவகாரத்தில் தெளிவான நம்பிக்கையை வழங்க வேண்டியுள்ளது.

இந்தநிலையில் அடுத்த கூட்டத்தில் இந்தத் தெரிவினை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்ற முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருக்கவில்லை.

மேலும், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான அறிவிப்பு நாளை புதன் அல்லது நாளை மறுதினம் வியாழக் கிழமை வெளியிடப்படும் என தெரிய வருகின்றது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை?

## எதிர்க் கட்சிகள் தயாராகி வருவதாக தகவல்கள் கசிவு

**(கொழும்பு)**

**ஆளும் கட்சிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சிகள் தயாராகி வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் ஏற்பட்ட பிளவு காரணமாக ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் தற்போது உள்ளனர். இதற்கு முன்னர், கிட்டத்தட்ட நூற்றியிருபது எம்.பி.க்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தனர்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினருக்கு எதிரணியில் அமர்வதற்கான வாய்ப்பு அதிகமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஆளும் கட்சியின் பெரும் பான்மை பலத்திற்கு சவால்விடுக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சர்கள் பலரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கருத்தோடு ஒன்றித்து இருப்பதால், எதிர்க் கட்சியில் அமர்ந்தால் அமைச்சர் பொறுப்புகளில் இருந்து விட்டு விலக நேரிடும் என அரசியல் வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவைச் சேர்ந்த ஸ்ரீபத்மராசா திவ்யன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான ஸ்ரீபத்மராசா திவ்யன் உணவு உற்பத்தி மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமானிப்பட்டத்தையும் மீன் பிடி மற்றும் நீரியல் வழங்கல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமானிப் பட்டத்தையும் பூர்த்தி செய்தவர்.

சிரபுரத்தான் என்ற புனைப் பெயரில் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது. (ந)



# தேர்தல் சட்ட மீறலை முறையிட விசேட இலக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது, அரச அதிகாரிகளால், தேர்தல் சட்டம் மீறப்படுமாயின் அது தொடர்பில் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

அதன்படி 076 791 4696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 011 250 5566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அண்மையில் வழிகாட்டல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)


"பொன்னகவை காணும் தீபஜோதி"
கூவில்
தீபஜோதி சனசமூக நிலையத்தின்
50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவினை முன்னிட்டு
தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும்
**மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெருவிழாவும்- 2024**

நான்காம் நாள் நிகழ்வு

**கலை நிகழ்வு**



காலம்: 06.08.2024 செவ்வாய்க்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானம்

**தலைமை**
திரு. பொ. செல்வகிருஸ்ணன்
(தலைவர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**
திரு. வேல் நந்தகுமார்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு. தி. செந்தில்நாதன்
(அதிபர்,யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)
திருமதி. சத்தியபாமா நவரத்தினம்
(அதிபர்.யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி)
திருமதி. கிருஸ்ணலதா குலசங்கர்
(அதிபர், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)
இலக்கியச் செம்மல் திரு. பரா ரதீஸ்
(அமைப்பாளர்,அகில இலங்கை இளங்கோ கழகம்,
ஆசிரியர்,யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)
திரு. மு. ஜெகதேவன்
(தலைவர்,புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு. ப. செல்வவிநாயகம்
(ஓய்வுநிலை அதிபர்,யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
திரு. கு. ரவீந்திரன்
(ஓய்வுநிலை அதிபர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)

**நிகழ்ச்சி நிரல்**
- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த் தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்- செல்வி லக்ஷிகா பிறேம்நாத் (தீபஜோதி கல்விக்கழக மாணவி)
- தலைமையுரை
- கலை நிகழ்வுகள்
- விருந்தினர்கள் உரை
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக் கழகம்,
தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம்,
தீபஜோதி கல்விக் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அரை மரதன் ஓட்டத்தில் தங்கம் வென்ற விதுசன்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டத்தில் முல்லைத் தீவு முத்து ஐயன்கட்டு இடதுகை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.விதுசன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டத்தில் முல்லைத்தீவு முத்து ஐயன்கட்டு இடதுகை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.விதுசன் 1 மணித்தியாலம் 15 நிமிடங்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-90)

## கனடா ஓபன் டென்னிஸ் ஸ்வியாடெக் விலகல்

யு.எஸ். ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடருக்கு தயாராகும் விதமாக டொரான்டோவில், கனடா ஓபன் டென்னிஸ் நடக்கவுள்ளது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இருந்து உலகின் "நம்பர்-1" போலந்தின் இகா ஸ்வியாடெக் விலகியுள்ளார் பாரிஸ் ஒலிம்பிக் ஒற்றையரில் வெண்கலம் வென்ற இவர், இதுவரை 5 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்று வருவதால் ஏற்பட்ட உடல் சோர்வு காரணமாக விலகினார்.

கஜகஸ்தானின் எலினா ரிபாகினா, இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினி, அமெரிக்காவின் டேனியல் கோலின்ஸ், கிரீசின் மரியா சக்காரி, செக்குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா ஆகியோரும் இத்தொடரில் இருந்து விலகி யுள்ளனர். இதனையடுத்து அமெரிக்காவின் சோபியா கெனின், ஸ்லோன் ஸ்டீபன்ஸ், நேரடியாக பிரதான சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

ஸ்வியாடெக் கூறுகையில், உடற்சோர்வு காரணமாக சிறிது ஓய்வு தேவைப்படுவதால் கனடா ஓபனில் இருந்து விலக நேரிட்டது. விரைவில் போட்டிக்கு திரும்புவேன் என தெரி வித்தார். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3188

### அபர்ணா




### தனுசன்




### கயல்விழி




### சரோன்




### காவியா




### அர்ஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணி எங்கள் சொத்து பிரிக்க இடமளிக்க மாட்டோம்

## மக்கள் கவனயீர்ப்பு

(கரணவாய்)

**தாளையடி கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரிவாக மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் முன்பாக மருதங்கேணி கிராம மக்கள் நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத் திருந்தனர்.**



வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மருதங் கேணி கிராம சேவகர் பிரிவு காணப்படுகின்றது.

இக் கிராம சேவகர் பிரிவில் மருதங்கேணி வடக்கு, மருதங் கேணி தெற்கு, தாளையடி என்கின்ற மூன்று கிராமங்கள் அடங்குகின்றன.

இந்நிலையில், தாளையடி என்கின்ற சுமார் 140 குடும் பங்களைக் கொண்ட கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரி வாக மாற்றுவதற்குரிய நடவடிக் கைகளை வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் இரகசியமாக மேற்கொண்டு வருவதாக தெரி வித்து, மருதங் கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு கிராம மக்கள், தாளையடி கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரி வாக மாற்றுவதை உடனடியாக கைவிடுமாறும் கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

மருதங்கேணி எங்கள் சொத்து இதனை ஒருநாளும் பிரிக்க இடமளிக்க மாட்டோம், தாளையடியில் கடல் நீரை நன்னீராக மாற்றும் திட்டத்திற் காக எமது பாரம்பரிய நிலங் களை அபகரிக்காதே, உங்கள் டீலுக்காக தாளையடி கிராமத்தை பிரிக்காதே, மருதங்கேணி எங்கள் பூர்வீக சொத்து, உங்கள் நலனுக்கு எங்கள் பிரதேசம் லஞ்சமா, எல்லை நிர்ணயம் செய்தபோது அயல் கிராமங்களை அழைக்காதது ஏன்? என்றவாறு பல்வேறு கோஷங்களை எழுப் பியதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

தாளையடி கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரி வாக ஆக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

அவ்வாறு தாளையடி கிராமம் தனியான கிராம சேவகர் பிரிவாக ஆக்கப்படும்போது எல்லைகள் நிர்ணயம் செய்யும் போது தங்களையும் அழைத் துத்தான் எல்லை நிர்ணயம் செய்யப்படும் என பிரதேச செயலாளர் தெரி வித்தார். (6-60)

# எதிர்வரும் 14 ஆம் திகதி வரை வட- கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

## வானிலை அறிக்கை



(யாழ்ப்பாணம்)

வெப்பச் சலனம் மற்றும் காற்று வேக மாறுபாடு கார ணமாக எதிர்வரும் 14 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ். பல் கலைக்கழக புவி யியற்றுறை பேரா சிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரி வித்துள்ளார். உள் நிலப் பகு திகளில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் சற்று கன மான மழையைப் பெறும் வாய்ப்புள்ளது.

எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களை அறுவடை செய் பவர்கள் மழை தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் மேலும் வெப்பச் சலன செயற் பாடுகாரணமாக இந்த மழை கிடைக்கும் என்ப தனால் இடி மின்னல் தொடர் பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் என அதில் குறிப்பிடப்பட்டுள் ளது. (6-33)

# செல்வச் சந்நிதியானின் கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் மாலை கொடியேற்றதுடன் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (6-33)

# இராசிபலன்

06.08. 2024
ஆடி 21, செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 7.55 மணிவரை

மகம் முன்னிரவு 6.33 மணிவரை
சுபநேரம் 10.34 - 12.04 மணிவரை
இராகுகாலம் 3.04- 4.34 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப் படை வசதி வாய்ப் புக்கள் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வரு மானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய் திகள் வந்து சேர லாம், உறவினர் வழி யில் எதிர் பார்த்த நற்பலன் கிடைக்கும், நண்பர்கள் வழியில் அனுகூல முண்டு.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு பவர்களை இனம் கண்டுகொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** குடும்பத்தினர் பெரு மைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடை பெறலாம், புதிய பொருள் சேர்க்கையுண்டு, நன்மை கள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார் கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல் களை அறிந்து கொள்வீர்கள், குடும்பத்தில் சுமை கூடும், ஆரோக் கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** அலைச்சல்கள் காணப் பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழி பாட்டால் ஆதாயம் காணவேண்டிய நாள், சுபவிர யங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறையுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூல மாக நடந்து கொள் வார்கள், எதிர்பாரத ஒருவர் உதவ முன் வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெற லாம்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வங்கியில் சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங் கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், உதாசீனப்படுத் தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும்.

**மகரம்:** சிலர் பாரட்டுவது போல உங்களை விமர் சிக்கலாம், பயணங் களின் போது விழிப் புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாம தமாகலாம்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத் தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**மீனம்:** செய்தொழில் மேன் மையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன் பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகை யில் அமையும், உடல் நலனில் இருந்த பாதிப்பு அகலும்.

**ஆர்வம் என்ற பரிசை அனைவருக்கும் வழங்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்தில் நோய்த்தாக்கம் விளைச்சல் பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் அதிகரித்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதுடன் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.**



கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்தி இரண்டாயிரத்து 781.25 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது

இவ்வாறு முன்னெடுக்கப் பட்டுள்ள சிறுபோக செய்கை யில் பல்வேறுபட்ட நோய் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. நெல் வயல்களில் தத்தி, மடிச்சுக்கட்டி, இலை சுருட்டி போன்ற நோய்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின் றது.

கடந்த கால போகத்திலும் இவ்வாறான நோய்த் தாக்கம் காரணமாக பெரும் அழிவுகளை சந்தித்த விவசாயிகள் இம்முறை சிறுபோகத்திலாவது ஓரளவு விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்த்து இருந்த போதும் இவ்வாறு நோய்த்தாக்கம் அதிகரித்து வருகின்றமையால் விளைச்சல் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (6-315)

# வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தனின் மஹோற்சவம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய மஹோற் சவம், எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாக்களில் எதிர்வரும் 18ஆம் திகதி மாலை மஞ்சத் திருவிழாவும், 25 ஆம் திகதி அருணகிரிநாதர் உற்சவமும், 26 ஆம் திகதி மாலை கார்த்திகை உற்சவமும், 27 ஆம் திகதி காலை சூர்யோற்சவமும், 28 ஆம் திகதி காலை சந்தான கோபலர் உற்சவமும், அன்றைய தினம் மாலை கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், 29 ஆம் திகதி காலை கஜவல்லி - மஹா வல்லி உற்சவமும், அன்றைய தினம் மாலை வேல் விமானம் (துங்க ரதம்) உற்சவமும், 30 ஆம் திகதி காலை தண் டாயுதபாணி உற்சவமும், அன் றைய தினம் மாலை ஒருமுக உற்சவமும், 31 ஆம் திகதி மாலை சப்பற உற்சவமும் செப்டெம்பர் 1 ஆம் திகதி காலை தேர்த் திரு விழாவும் 2 ஆம் திகதி காலை தீர்த் தத்திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக் கமும் 3 ஆம் திகதி மாலை பூங்காவனத் திருவிழா வும் மறுநாள் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன. (6-33)

# கலாசாலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கும் 11.30 மணிக்கும் என இரண்டு அமர்வுகளாக கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுருபாய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.யோன்குயின்ரஸ் கலந்து கொள்ள வுள்ளார்.

இந்நிகழ்வில் 238 ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தகைமைப் பத்திரங்களைப் பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-33)

# மருத்துவர் அர்ச்சுனாவுக்கு பிணை மனு நிராகரிப்பு

## தொடர்ந்து மறியலில்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுமதியின்றி நுழைந்து முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் மகப்பேற்று மருத்துவர் அறைக்குள் நுழைந்து புகைப்படம் மற்றும் காணொளி எடுத்தமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனாவை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மருத்துவர் கடந்த சனிக்கிழமை மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது குறித்த வைத்தியரை நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

நேற்று நகர்தல் பத்திரம் ஊடாக குறித்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் பிணை மனு நிராகரிக்கப்பட்டு தொடர்ந்தும் வைத்தியரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம் வைத்தியசாலையினுள் அனுமதி இன்றி வைத்தியருடன் நுழைந்து காணொளி பதிவுகளை மேற்கொண்ட இருவரையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (6-285)

# சிவபூமி பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சிவபூமி பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோண் டாவில் பாடசாலை மைதானத்தில் சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ம.இளம்பிறையன் தம்பதிகள், சிறப்பு விருந்தினராக இங்கிலாந்து தொழிலதிபர் ஜெயசீலன் தாட்சாயினி தம்பதிகள் மற்றும் நன்றியுரையினை சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர் ம.தயாகரன் நிகழ்த்த வுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைப்புத் தொகைக்கான வங்கி வட்டி விகிதங்களில் திருத்தம்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புத் தொகைக்கான வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு யோசனை அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் வங்கி வட்டி வீதத்தை குறைக்குமாறு கடன் பெற்றவர்கள் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் அதற்கமைவாக வங்கி வட்டி வீதமும் பொதுவாக கடன் வட்டி வீதத்தை குறைக்கும் போது குறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். கடந்த காலங்களில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்ட போது அரசாங்கம் குறிப்பிட்ட சதவீத வட்டியை சேர்த்து சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வங்கிகளுக்கு 88 பில்லியன் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. மறுபுறம் கிட்டத்தட்ட 15 லட்சம் கணக்கு வைத்திருப்பவர்கள் வட்டி விகிதத்தைக் குறைப்பதில் சிக்கலை எதிர்கொண்டுள்ள நேரத்தில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இப்பிரச்சினைக்கு திறைசேரி வழங்கக்கூடிய பதில் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் சாதகமான பதில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (6)

# பிரதமரை சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்தார்.

இருவரும் இருதரப்பு உறவுகள் மற்றும் பொருளதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (6)

# இஞ்சி இறக்குமதிக்கு பத்திரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாட்டில், தற்போது நிலவும் இஞ்சி தட்டுப்பாட்டிற்கு தற்காலிக தீர்வாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு அடுத்த மூன்று மாதங்களில் 3,000 மெற்றிக்தொன் இஞ்சியை இறக்குமதி செய்வது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரால் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17ஆம் திகதி சிறப்பு வர்த்தமானியின்படி, இஞ்சி இறக்குமதியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# தோல்விக்கு அஞ்சியவர்களே கட்சி தாவியுள்ளனர்

## இந்திக்க



(கொழும்பு)

தேர்தல் தோல்விக்கு அஞ்சுபவர்களே இன்று கட்சித் தாவலில் ஈடுபட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் லாபம் கருதி பொதுஜன பெரமுனவில் இருந்து பலர் கட்சித்தாவல்களில் ஈடுபட்டுள்ள போதிலும் கட்சியின் ஆதரவாளர்கள் ஒரு போதும் விலகிச் செல்லமாட்டார்கள்.

ஒரு சிலரின் செயற்பாடுகளினாலேயே பொதுஜன பெரமுன இன்று இவ்வாறான ஒரு நிலையை எதிர்கொண்டுள்ளது. பொதுஜன பெரமுனகட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவோர் அரசியல் லாபம் கருதி விலகிச் சென்றாலும் கட்சியின் ஆதரவாளர்கள் ஒரு போதும் விலகிச் செல்லமாட்டார்கள் என தெரிவித்தார். (6)

# இஸ்ரேலில் இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

## இலங்கை தூதுவர்

(கொழும்பு)

இஸ்ரேலில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக அங்குள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வடக்குப் பகுதியை இலக்கு வைத்து ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்புகள் வான் வழித் தாக்குதல்களை முன்னெடுத்து வருவதுடன் இந்தத் தாக்குதல்கள் தானியங்கி வான் பாதுகாப்பு அமைப்பினூடாக முறியடிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலில் பணியாற்றி வரும் 70 சதவீதமான இலங்கையர்கள் பராமரிப்பாளர்களாக உள்ளதுடன் அவர்கள் வீடுகளுக்கு உள்ளேயே இருப்பதனால் பாதுகாப்பாக இருப்பதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (6)

# கட்டுப்பணம் செலுத்திய பொன்சேகா



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுயாதீன வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

இதேவேளை 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 15 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (6)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, ...
077 839 3974

(227)



மாணிக்கவாசகர் மடாலயத்திலும் இல்லங்களிலும் ஆலயங்களிலும் திருவாசகம் ஓதுவோம்

இறைவனைத்தேடி திருவடி பணிவோம் ஆடி 3 ஆம் பிறைதேடி அம்மைப்பேறு பெறுவோம் இன்று 06.08.2024

"பிறப்பதற்கு முன்னெலாம் இருக்குமாற தெங்ஙனே
பிறந்துமண் ணிறந்துபோய் இருக்குமாற தெங்ஙனே
குறித்துநீர் சொலாவிடில் குறிப்பில்லாத மாந்தரே!
அறுப்பனே செவிஇரண்டும் அஞ்செழுத்து வாளினால்"
சித்தர்–சிவவாக்கியார்

இன்று மடாலயங்களிலும் ஆலயங்களிலும் இல்லங்களிலும் திருவாசகம். உள்ளங்களிலும் ஓதி எம்பெருமான் திருவடி தேடி வணங்குவோம். ஆடிப்பிறைத் தேடிப் பார்ப்போம். அம்மையின் அருளை மிகு உயரிய பேறு ஆன்மாவுக்கு வாய்க்கிறது. சிறந்ததொரு சிவப்பணியாகும். அம்மையின் அருளையே மிகு உயரிய பேறு ஆன்மாவுக்கு வாய்க்கிறது. இது "அம்மைப்பேறு" எனச் சித்தாந்திகள் போற்றி உரைப்பர்.



க.கு.க சிவபாலன் முன்னாள் பொருளாளர், ... மாணிக்கவாசகர் மடாலயம்.

(சி-933)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# வயநாட்டில் மகளின் ஒரு கைக்கு இறுதிச்சடங்கு செய்த தந்தை

## மனதை நெகிழ வைத்த சம்பவம்





(டில்லி)

வயநாட்டைச் சேர்ந்தவர் ராமசாமி. கடந்த வாரம் அங்கு ஏற்பட்ட நிலச்சரிவில் அவரது மகள் ஜிசா மாயமானார். பல்வேறு கட்டத் தேடுதல் பணிக்குப் பிறகு ஜிசாவின் ஒரு கை மட்டும் கிடைத்தது. அவரது விரலில் திருமண மோதிரமும், அதில் அவரது கணவர் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. இதை வைத்து அது தன் மகள் ஜிசாவின் கைதான் என்பதை தந்தை ராமசாமி உறுதி செய்தார்.

தன் மகளின் .ஒரு கைக்கு இறுதிச் சடங்கு செய்யும் ராமசாமியின் புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. மகள் ஜிசாவின் ஒரு கை வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டு தகன மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும் ராமசாமி தன் முகத்தை மூடியபடி கதறி அழுகிறார். பார்ப்பவர்களை கண் கலங்கச் செய்யக்கூடியதாக அந்தப் புகைப்படம் உள்ளது.

கேரள மாநிலம் வயநாட்டில் கடந்த 29ஆம் திகதி பெய்த கனமழையால் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டது. முண்டக்கை, சூரல்மலை, மேப்பாடி ஆகிய கிராமங்கள் நிலச்சரிவால் மண்ணுக்குள் புதைந்தன. காட்டாற்று வெள்ளத்தில் வீடுகளும் அடித்துச் செல்லப்பட்டன.

இதுவரையில் 360இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துடன் மாயமாகியுமுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# ரஷ்யா திரும்பிய உளவாளி தம்பதியை வரவேற்ற புடின்



(மொஸ்கோ)

அமெரிக்கா, ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் தங்கள் நாட்டு கைதிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது. இதன் ஒரு பகுதியாக. ரஷ்ய கொலையாளியான வாதிம் கிரசி கோவை விடுவிக்க ஜேர்மனி ஒப்புக் கொண்டது. கிரசிகோவ் உட்பட 8 கைதிகள் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, ரஷ்யாவின் ஆர்டெம் டல்ட்சேவ் மற்றும் அவருடைய மனைவி அன்னா டல்ட்சேவ் தம்பதி தங்களுடைய 2 குழந்தைகளுடன் அமெரிக்காவிலிருந்து மொஸ்கோ சென்றடைந்தனர். விமான நிலையம் சென்றடைந்த அவர்களை அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அப்போது அன்னா டல்ட்சேவ் கண்ணீர் மல்க புடினை ஆரத் தழுவினார். அப்போது, அந்த குழந்தைகளுக்கு ரஷ்ய மொழி தெரியாது என்பதால் ஸ்பானிஷ் மொழியில் புடின் அவர்களுடன் பேசினார்.

ஆனால் அந்தக் குழந்தைகளுக்கு புடின் யார் என் தெரியவில்லை. மேலும், அந்த குழந்தைகளுக்கு தாங்கள் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்பது மொஸ்கோ சென்ற பிறகுதான் தெரியவந்துள்ளது.

இதற்கு பதிலாக ரஷ்ய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அமெரிக்க முன்னாள் கடற்படை வீரர் பால் வேலன், வால் ஸ்ட்ரீட் பத்திரிகை செய்தியாளர் இவான் கெர்ஷ்கோவிக் உட்பட 16 வெளிநாட்டவர்கள் அவரவர் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார். (6)

# வடகொரியாவில் வெள்ளப்பெருக்கு மீட்பு பணியில் களமிறங்கிய கிம்ஜாங்

(பியாங்யாங்)

வடகொரியாவில் வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்பட்ட 5,000 இற்கும் மேற்பட்டோர் விமானம் மூலம் மீட்கப்பட்டதாக வடகொரிய அரசு ஊடகம் நேற்று தெரிவித்தது.

அங்கே இதுவரை வெள்ளம் காரணமாக 100 பேர் வரை பலியாகி உள்ளதாக கூறப்படுகிறது. 200 இற்கும் அதிகமானோர் இதனால் காணாமல் போகும் வாய்ப்புகளும் உள்ளன.

வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் இதற்கான இராணுவ மீட்பு நடவடிக்கையை தனிப்பட்ட முறையில் வழிநடத்தி வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

நேரடியாக வெள்ளத்திற்கு இடையே களத்திற்கே சென்று அவர் மீட்பு பணிகளை மேற்கொண்டு உள்ளார். அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் (KCNA) இதற்கான புகைப்படங்களை வெளியிட்டு உள்ளது.





கடந்த சனிக்கிழமையன்று பெய்த கனமழையால் நாட்டின் வடமேற்கு பகுதியில் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் வட கொரிய சீன எல்லையில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது.

இந்த வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கவே அங்கே ராணுவம் நேரடியாக சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதில்தான் கிம் ஜாங் உன் நேரடியாக களமிறங்கி மீட்பு பணிகளைச் செய்து வருகிறார்.

கிம் ·மேற்பார்வையிட்ட மீட்பு நடவடிக்கையில், சுமார் 10 இராணுவ ஹெலிகொப்டர்கள் மற்றும் கடற்படை மற்றும் அரசு படகுகள் ஈடுபடுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஒரு நாட்டின் ஜனாதிபதியாக அவர் நேரடியாக களத்திற்கே வந்து மீட்பு பணிகளை செய்தது வரவேற்பை பெற்றுள்ளது.

பொதுவாக கிம் ஜாங் உன் மோசமான தலைவர், கண்டிப்பானவர் என்றெல்லாம் விமர்சனம் வைக்கப்படும் நிலையில் தன் மீதான பிம்பத்தை கிம் ஜாங் உன் உடைத்து இருக்கிறார். (6)

# ரஷ்யா நீர்மூழ்கி கப்பலை அழித்த உக்ரைன்



(மொஸ்கோ)

கிரிமியா வளைகுடாவில் ரஷ்யாவின் நீர்மூழ்கியொன்றை மூழ்கடித்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

கிரிமியா வளைகுடாவில் நங்கூரமிடப்பட்டிருந்த ரஷ்யாவின் நீர்மூழ்கியே இவ்வாறு தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

செவஸ்டபோல் நகரில் உள்ள துறைமுகத்தில் ஏவுகணை தாக்குதல் காரணமாக ரஷ்ய நீர் மூழ்கி அழிக்கப்பட்டது என உக்ரைன் தெரிவித்துள்ளது. மேலும் ரஷ்யாவின் கருங்கடல் கடற்படைபிரிவினால் பயன்படுத்தப்பட்ட நான்கு நீர்மூழ்கிகளில் ஒன்றையே உக்ரைன் தாக்கி அழித்துள்ளது. இந்த நீர்மூழ்கிகளை பயன்படுத் தியே கலிப்ர் குரூஸ் ஏவு கணைகளை ரஷ்யா ஏவி வந்துள்ளது. கிரிமியாவின் பாதுகாப்பிற்கு என ரஷ்யா பயன்படுத்தி வந்த நான்கு எஸ்- 400 வான்வெளிப் பாது காப்பு அமைப்பு முறையையும் அழித்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஷேக் ஹசீனா இராஜினாமா

# ஆட்சியை கைப்பற்றியது இராணுவம்

## பங்களாதேஷில் பதற்ற நிலை

(டாக்கா)

**பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா நேற்று தனது பதவியை இராஜினாமா செய்ததுடன் தலைநகரான டாக்காவை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது.**






பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

சமீபத்தில் நடந்த வன்முறையில் பலர் பலியான நிலையில் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலக வலியுறுத்தி வந்தனர்.

பங்களாதேஷில் 1971 ஆம் ஆண்டு போரில் பங்கேற்றவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலையில் இடஒதுக்கீட்டை அமுல்படுத்த 2018 இல் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாணவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியதையடுத்து அரசு நிறுத்தி வைத்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன் இடஒதுக்கீட்டை மீண்டும் அமுல்படுத்த போவதாக அந்நாட்டு அரசு அறிவித்தது. இதை எதிர்த்து பங்களாதேஷ் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். போராட்டம் வன்முறையாக மாறியதில் இதுவரை 105 பேர் உயிரிழந்தனர்.

டாக்காவை விட்டு பிரதமரும் அவரது சகோதரி ஷேக் ரிஹானாவுடன் சேர்ந்து இராணுவ ஹெலிகொப்டர் மூலம் பாதுகாப்பான இடத்திற்கு சென்று விட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டு உள்ளன.

இதனிடையே ஷேக் ஹசீனா இந்தியாவின் திரிபுரா மாநிலம் அகர்தலாவில் தஞ்சமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பிரதமர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில் வன்முறை வெடித்ததும் பிரதமர் இல்லத்தில் இருந்து ஷேக் ஹசீனா வெளியேறி விட்டார்.

தற்போது அவர் எங்கு உள்ளார் எனத் தெரியவில்லை. டாக்காவில் நிலைமை பதற்றமாக உள்ளது. போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லத்தை முற்றுகையிட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

அந்நாட்டு மக்களுக்கு ராணுவ தளபதி வக்கார் ஜமான் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியதாவது, ஷேக் ஹசீனா ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

இடைக்கால ஆட்சி அமைக்க நாங்கள் உதவி செய்வோம். முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இராணுவம் ஆலோசனை நடத்தி வருகிறது.

இந்த கடினமான நேரத்தில் நாட்டு மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். அனைவரின் பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும்.

மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு வீடுகளுக்கு செல்ல வேண்டும். நாட்டில் அவசர நிலையோ அல்லது கட்டுப்பாடுகளோ தேவையில்லை. மேலும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனத் தெரிவித்தார். (6)

# டைட்டானிய செயற்கை இதயம்

## பொருத்தும் சிகிச்சை வெற்றியளிப்பு

(வோஷிங்டன்)

58 வயதான அமெரிக்கர் ஒருவருக்கு டைட்டானியத்தால் செய்யப்பட்ட இதயத்தை பொறுத்தி மருத்துவர்கள் அசத்தியுள்ளனர்.

மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமான bivacor என்ற நிறுவனம், உருவாக்கிய titanium blood-pumper கருவியானது செயலிழக்கும் நிலையில் உள்ள மனித இதயத்தின் செயற்பாட்டை மாற்றி அமைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கை இதயம், முழுவதும் டைட்டானியத்தால் ஆனது. இதயம் செயலிழக்கும் ஆபத்தில் உள்ளவர்களுக்கு வேறொரு இதயம் பொருத்தும் வரை இது ஒரு மாற்று இதயமாக செயல்படுகிறது.

இது உண்மையான இதயத்தை போல துடிப்பது இல்லை. இதற்கு மாறாக, இதிலுள்ள magnetically levitating rotor நுரையீரல் மற்றும் உடலின் மற்ற பகுதிகளுக்கு இரத்தத்தை பம்ப் செய்து தள்ளுகிறது. இந்த கருவியானது டெக்சாஸ் ஹார்ட் இன்ஸ்டிட்யூட்டில் உள்ள பேய்லர் செயின்ட் லூக்கின் மருத்துவமனையில் ஒரு வருடத்திற்குள் மேலாக சோதனையில் ஈடுபடுத்தப்பட்டது.

இந்நிலையில்தான், 58 வயதான இருதயம் செயலிழப்பு தருவாயில் இருந்த ஒரு நபருக்கு, இந்த கருவியானது பொருத்தப்பட்டுள்ளது. மாற்று இதய அறுவை சிகிச்சை மூலம் மாற்று இதயம் பொருத்தும் வரை 8 நாட்களாக இந்த டைட்டானிய இதயம் சிறந்த முறையில் அவரின் உடலில் வேலை செய்தது. BIVACOR இன் நிறுவனர் டேனியல் டிம்ஸ் இது குறித்து தெரிவிக்கையில், "எங்கள் TAH இன் வெற்றிகரமான முதல் மனித உள்வைப்பைக் கண்டதில் நான் நம்பமுடியாத அளவிற்கு பெருமைப்படுகிறேன். எங்கள் முதல் நோயாளி மற்றும் அவர்களது குடும்பத்தினரின் தைரியம், எங்கள் குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் டெக்சாஸ் ஹார்ட் இன்ஸ்டிடியூட் நிபுணர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இது சாத்தியமில்லை." என்று தெரிவித்துள்ளார்.(6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் கடைகள் கோவிலில் திருட்டு - இருவர் கைது

## பணம், பொருட்கள் மீட்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ஐந்து கடையும் கோவிலும் உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடைகள், ஆலய உண்டியல் உடைத்து திருடப்பட்ட சம்பவங்கள் அண்மைய நாட்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு கடை, வைத்திய சாலைக்கு முன்பாக அமைந் துள்ள ஒரு கடை , மந்துவில்லில் ஒரு கடை, காமன்ஸ் அருகே ஒரு கடை, செம்மண் குன்றில் ஒரு கடை என ஐந்து கடைகளும் புதுக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயத்தில் உண்டியலும் உடைக்கப்பட்டு பணமும் பொருட்களும் திருடப்பட்டுள்ளன.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையிலான பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட ரூ.46,230 பணமும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் கள் 10ஆம் வட்டாரம் (வயது - 14) மந்துவில்லை சேர்ந்த (வயது -24) இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளினை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (6-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 200-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 250 | 200 | 210 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 350-400 | 450 |
| தக்காளி | 350 | 300 | 260 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 130-160 | 200 |
| கோவா | 400 | 450 | 360 | 360 | 500 |
| கரட் | 400 | 400 | 480 | 350 | 500 |
| பூசணி | 200 | 160 | 180 | 150 | 160 |
| புடோல் | 200 | 180 | 150 | 130 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | 300 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 350 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 | 200 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 500 | 500 |
| வெண்டைக்காய் | 200 | 200 | 160 | 150-200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 650 | 600 | 450 | 350-400 | 500 |
| லீக்ஸ் | 550 | 500 | 450 | 360 | 500 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1200 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 200 | 50-80 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 1200 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 40 | 60 | 80 |
| தேசிக்காய் | 800 | 600 | 800 | 500-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 600 | 450 | 650 | 150 | 700 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 400 | - | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 160 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 70 |

# இன்று ஒரு தகவல் 204



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலிலே பிரயாணம் செய்து கொண்டு இருக்கிறார். அவர் கையிலே ஒரு பை. அதில் நிறையப்பணம் இருக்கிறது. அந்தப் பெரியவர் களைப்பினாலே கண்ணை மெதுவாக மூடுகிறார். அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருந்த ஆசாமி ஒருவர் மெதுவாக அருகில் வருகிறார். மெதுவாக அந்த கைப்பையை தூக்கிக் கொண்டு போய் விடுகின்றான். அவன் முழுசா நழுவுவதற்குள் இருகில் இருப்பவர்கள் அவனைப் பார்த்து விடுகிறார்கள். உடனே சத்தம் போடுகிறார்கள். உடனே பெரியவர் முழித்துக் கொள்கிறார்.

உடனே எழுந்து ஓடி அந்த ஆசாமி மேலே பாய்ந்து அந்தப் பையை பெற்றுக் கொண்டு வந்த பின்புதான் அவருக்கு நிம்மதி. அந்த ஆசாமிக்கு என்ன மரியாதை குடுக்க வேண்டுமோ அதை மற்றவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் இது தான் இயல்பு.

இதை விட்டு விட்டு பெரியவர் பணப்பையைத் தானே எடுத்துக்கொண்டு போகிறான். போனால் போகட்டும். அவனும் மனிதன் நானும் மனிதன் என்று வேதாந்தம் பேச மாட்டார். அப்படிப் பேசினால் அவர் வேதாந்தத்தைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

இதை விளங்க வைப்பதற்காக இராமகிஷ்ணரே ஒரு கதை சொல்லி இருக்கிறார்!

ஒரு காட்டிலே ஒரு சாது இருந்தாராம். அவருக்கு பல சீர்கள். ஒரு நாள் அவர்களையெல்லாம் கூப்பிட்டு உட்கார வைத்து உபதேசம் செய்து கொண்டு இருந்தார். இந்த உலகத்திலே இருக்கின்றது எல்லாமே கடவுளுடைய வடிவங்கள்.அதை நாங்கள் எல்லோரும் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்க வேண்டும் என்றார். எல்லா சீர்களும் மிகவும் அக்கறையாக அதை மனதிலே வாங்கிக்கொண்டார்கள்.

ஒரு நாள் ஒரு சீடன் விறகு எடுப்பதற்காகக் காட்டிற்குப் போனான். அவனுக்கு எதற்கு விறகு? ஹோமம் வளர்ப்பதற்கு. நடுகாட்டிலே போய்க்கொண்டிருந்தான். அந்த சமயத்திலே திடீர் என்று ஒரு சத்தம் கேட்டது. யாரோ ஒரு ஆள் பலமாகச் சத்தம் போட்டுச் சொல்கின்றார். யார் எங்கிருந்தாலும் ஓடிப்போய்விடுங்கள். மதம் பிடித்த யானை ஒன்று வந்து கொண்டிருக்கின்றது.என்று யாரோ கத்துகின்றார்கள். அவ்வளவு தான். இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடிப்போய் ஒழிந்து கொண்டார்கள்.

சில பேர் கிடுகிடு என்று மரத்திலே ஏறி உட்கார்ந்தார்கள். ஆனால் இந்த சீடன் மட்டும் நகரவேயில்லை. நான் எதற்காக ஓட வேண்டும். இந்த யானை கடவுள். என்று நினைத்துக் கொண்டு அந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான். யானை அருகிலே வந்து விட்டது. இவன் அசையவே இல்லை. இருந்த இடத்திலேயே நின்று கொண்டு கை இரண்டையும் மேலே தூக்கினான். துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான். யானைக்கு மேலே இருந்த மாவுத்தன் சத்தம் போட்டான் ஓடிப் போய்விடு! ஓடிப்போய்விடு! என்று கத்தினான்.

அந்த சீடனிற்கு அது எல்லாம் பெரிதாகப் படவில்லை. அவன் பாட்டிற்கு எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான். இவன் வேண்டும் என்றால் இந்த யானையை கடவுளாக நினைக்கலாம். ஆனால் இந்த யானை இவனை கடவுளாக நினைக்க வேண்டுமே. அப்படி எல்லாம் அதற்கு ஒன்றும் தோன்றவில்லை. இவன் கை இரண்டையும் மேலே தூக்கிக் கொண்டு நின்றது அதற்கு வசதியாகக் போய்விட்டது. அப்படியே துதிக்கையினாலே சுருட்டி வளைத்து அவனை மேலே தூக்கியது. தூக்கி வேகமாக ஒரு பக்கமாக தூக்கி எறிந்து விட்டு போய்விட்டது.

அம்மாடி என்று கத்திக் கொண்டே போய் விழுந்தான். பலமான காயம் . ஆச்சி ரமத்திலே இருந்தவர்கள் இதைக் கேள்விப்பட்டு ஓடி வந்தார்கள். தூக்கிக் கொண்டு போய் ஆச்சிரமத்திலே போட்டார்கள். இவர் மெதுவாகக் கண்ணைத்திறந்து பார்த்தான். அப்போது அங்கே இருந்த சீடன் ஒருவன் கேட்டான் யானை வந்தது தான் உனக்கு தெரியுமே. நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை என்றான்.

உலகத்திலே இருக்கிறது எல்லாமே கடவுளுடைய வடிவங்கள்நம் குரு தேவர் அப்படித் தானே சொன்னார். அதனாலே யானையைப் பார்த்ததும் கடவுள் தான் வாரார் என்று நினைத்து விட்டேன் என்றார் இவரே. குருநாதர் இதைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்தார். அவர் சொன்னார். அது சரிப்பா நீயும் கடவுள் தான் யானையும் கடவுள் தான் ஆனால் அந்த யானை மேலே உட்கார்ந்திருந்த மாவுத்தனும் கடவுள் தானே. அந்தக் கடவுள் ஓடிப் போ என்று எச்சரிக்கை கொடுத்தாரே. அந்த வார்த்தையிலே உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை என்று கேட்டார்.

சீடன் திருதிரு என்று முழிக்க ஆரம்பித்தான். அப்போது தான் அவன் செய்த தவறு அவனுக்கு புரிந்தது. வேதாந்தத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததனாலே வந்த விளைவு.

இது வேதாந்திகள் மாதிரி இருக்கின்ற சில பேரையும் இந்த காலத்திலே சரியாக புரிந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. நான் ஆரம்பத்திலே சொன்னனே ரயிலிலே பயணம் செய்த பெரியவர் ஒருவரைப் பற்றி அதே மாதிரி வேதாந்தி ஒருவரின் பிரயாணம் செய்தார்.இவர் கையிலே ஒரு சூட்கேஸ் இருந்தது.

எளளறஅதை சமயம் பார்த்து ஒரு திருடன் எடுத்து கொண்டு ஓடினான். எல்லோரும் அங்கே சத்தம். போட்டார்கள். இவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவே இல்லை. போனால் போகட்டும் கவலை இல்லை அந்த திருடனை ஒன்றும் செய்யாதீர்கள் பாவம் பிழைத்துப் போகட்டும் என்று விட்டார்.

இவர் தான் உண்மையான வேதாந்தி என்று நினைத்து எல்லோரும் காலிலே விழுந்து கும்பிட ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு உண்மை தெரியாது அதாவது அந்த சூட்கேசிலே இருந்தது முழுவதும் கள்ள நோட்டு என்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024




கிரகநிலை - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி (வ) - சுக ஸ்தானத்தில் ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய், குரு - களத்திர ஸ்தானத்தில் சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 01.08.2024 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில்

**பலன்கள்:** நீங்கள் இறை நம்பிக்கை அதிகம் உடையவர்கள். இந்த மாதம் அனைத்து கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிக்கும் சூழ்நிலை உண்டாகும். சுக்கிரன் சஞ்சாரம் பணவரவைத் தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வீண் செலவுகள் உண்டாகும். எதிர்ப்புகள் நீங்கி காரிய அனுகூலம் உண்டாகும். நீண்ட தூர பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு பழைய பாக்கிகள் வசூலாக நிதிநிலை உயரும். கடன் பிரச்சினைகள் குறையும். தொழில் போட்டிகள் விலகும். வேலை தேடுபவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மறைமுகமான எதிர்ப் புகள்

சரித்து செல்வது நல்லது. மனக்கவலை உண்டாகும்.

அரசியல்துறையினர் வீண் அலைச்சலும் அதனால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாமலும் போகலாம். எதிலும் கவனமாக செயற்படுவது நல்லது.

உடல் சோர்வு உண்டாகலாம். வீண் அலைச்சலைத் தவிர்த்து எடுத்துக் கொண்ட காரியங்களில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் நீங்கும். எதிர்பார்த்த வெற்றிக்கு கூடுதல் முயற்சி பலன் அளிக்கும்.

**மூலம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் சிறப்படையும். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விடயங்கள்



**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் எதிர்காலத்துக்கு உதவக்கூடிய விடயங்களில் ஆர்வம் உண்டாகும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். மனதில் இருந்த குழப்பம்

## தனக்கு கிடைத்திருக்கும் தெய்வீக அருளை அனைவருக்கும் தர விருப்பப்படும் தனுசு ராசியினரே!

இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று செவ்வாய் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31.08.2024 அன்று புதன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

விலகும். குடும்பத்தில் இருந்த கஷ்டங்கள் நீங்கும். குதூகலம் அதிகரிக்கும்.

கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். தொல்லைகள் நீங்கும். பெண்களுக்கு எதையும் எளிதாக செய்து முடிக்கும் திறமை உண்டாகும். பயணங்கள் வெற்றியைத் தரும். கலைத்துறையினர் யாரிடமும் வீண் சண்டையைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். அனுசாதகமாக முடியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**பூராடம்:** இந்த மாதம் குடும்பத்தில் உற்சாகம் இருக்கும். மற்றவர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். தம்பதிகளுக்கிடையே மகிழ்ச்சியான நிலை காணப்படும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படலாம். பேச்சின் இனிமை சாதுரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும்.

நீங்கி தைரியம் ஏற்படும். போட்டிகளில் பங்கு பெற ஆர்வம் உண்டாகும்.

**பரிகாரம்:** நவக்கிரக குருவை வியாழக்கிழமைகளில் வணங்க எல்லா கஷ்டங்களும் நீங்கி சுகம் உண்டாகும். கல்வியில் தேர்ச்சி கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன். சந்திராஷ்டம தினங்கள்: 3, 4, 5, 31.

**அதிஷ்ட தினங்கள்:** 24, 25.




கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி (வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய், குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 01.08.2024

**பலன்கள்:** இந்த மாதம் மனதில் புதிய உற்சாகம் உண்டாகும். மனதில் தன்னம்பிக்கையை அதிகரிக்க செய்யும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பணவரவு எதிர்பார்த்தபடி வரும்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செவ்வாய் சஞ்சாரத்தால் கெட்ட கனவுகள் தோன்றலாம். நட்பாக இருந்தவர்கள் பிரிந்து செல்லலாம். சுக்கிரனின் சுகஸ்தான சஞ்சாரம் நல்ல பலன்களை தரும்.

தொழில் வியாபாரம் வழக்கம் போல் நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேலதி

தாமதமும் ஏற்படலாம். கவனம் தேவை.

அரசியல்துறையினர் பல தடைகளைத் தாண்டி செயற்பட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். செயற் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விடயங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். மனதில் இருந்த கவலை நீங்கும்.

**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் காரிய தாமதம் உண்டாகலாம். குடும்பத்தில்



**அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வியாபாரம் தொடர்பான பயணங்கள் லாபம் தருவதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள்

## தனது வாதத் திறமையால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் மகர ராசியினரே!

அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31-08-2024 அன்று புதன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

காரிகளை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.

கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பிள்ளைகளுக்காக சில பணிகளை கவனிக்க வேண்டி இருக்கும். அவர்களை அன்புடன் நடத்துவது நல்லது. பெண்கள் எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவரவு திருப்தி தரும். கலைத்துறையினருக்கு புதிய முயற்சிகளைத் தள்ளி போடுவது நல்லது. வீண் அலைச்சலும் காரிய

அமைதி ஏற்படும். லாப நட்டங்களையும் அறிந்து அதற்கேற்ற வாறு செயற்படுவீர்கள். மனகுழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்.

**திருவோணம்:** இந்த மாதம் ஆக்கபூர்வமான யோசனைகளையும் காரிய வெற்றியும் வந்து சேரும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது.

சமூகத்தில் கௌரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். செயற்திறமை அதிகரிக்கும்.

**பரிகாரம்:** விநாயகருக்கு அறுகம்புல் மாலை போட்டு வணங்க எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும். மனதில் தைரியம் கூடும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 6, 7

**அதிர்ஷ்ட தினங்கள்:** 26, 27

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 550





விஹாரத்தில் நடுமுற்றத்தில் விட்டிருக்கிறேன் எப்படி அங்கே வந்தாய. கால்வாய் வழியாக, நோயாளியைப் படகில் கொண்டு வந்தேன். நடுங்கும் குளிர்க்காய்ச்சல். தாங்கள் உடனே...."

"பகவானே! நடுக்கும் சுரம் தொற்றும் நோய் ஆயிற்றே! இங்கே ஏன் அந்த நோயாளியை அழைத்து வந்தாய்? அதிலும் நல்ல சமயம் பார்த்து..."

"ஆச்சாரிய! அசோக சக்கரவர்த்தி புத்த மதத்தினர் என்று இதுகாறும் நினைத்திருந்தேன். இப்போது இல்லை என்று தெரிகிறது"

அது ஏன் அப்படிக் கூறுகிறாய்?

அசோக ஸ்தம்பம் ஒன்றை நான் காஞ்சிக்கு அருகில் பார்த்தேன். அதில் நோயாளிக்குச் சிகிச்சை செய்வதை முதன்மையான தர்மமாகச் சொல்லியிருக்கிறது. நீங்களோ இப்படி விரட்டி அடிக்கிறீர்கள்!" என்றான் அமுதன்.

ஆச்சாரிய பிக்கு மற்றவர்களைப் பார்த்து கொஞ்சம் பொறுங்கள் நான் போய்ப் பார்த்து விட்டு வந்து சொல்லுகிறேன் என்று கூறி விட்டு, "வா! அப்பனே" என்று அமுதனை அழைத்துக் கொண்டு சென்றார்.

விஹாரத்தின் நடுமுற்றத்தில் கால்வாய்க்கு அருகில் ஒரு யுவனும், யுவதியும் இருப்பதைப் பார்த்துப் பிககு திடுக்கிட்டார். "இது என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்? இந்த விஹாரத்துக்குள் ஸ்திரீகளே வரக்கூடாதே! பிக்குணிகளுக்குக் கூட வேறு தனி மடம் அல்லவா கட்டியிருக்கிறது?"

அருகில் போய் அந்த இளைஞர் யார் என்பதை உற்றுப் பார்த்ததும், பிக்கு திகைத்துப் போனார் என்று சொன்னால் போதாது! வியப்பினாலும் களிப்பினாலும் அவரால் சிறிது நேரம் பேசமுடியவில்லை.

சந்தேக நிவர்த்திக்காக, "இளவரசர் அருள் மொழி வர்மர் தானா?" என்று சேந்தன் அமுதனைக் கேட்டார்.

இது இளவரசர் காதில் விழுந்தது. "இல்லை, ஆச்சாரியரே இல்லை. நான் இளவரசனுமில்லை ஒன்றுமில்லை. இந்தப் பெண்ணும் இந்த பிள்ளையுமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்க்கிறார்கள்.

நான் ஒரு ஓடக்காரன். சற்றுமுன் இந்தப் பெண்ணைப் பார்த்து, "பெண்ணே! என்னை மணம் புரிந்து கொள்வாயா? இருவரும் படகில் ஏறித் தூர தேசங்களுக்குப் போகலாம்" என்றேன்.

இவள் ஏதேதோ பிதற்றினாள். நான் உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவனாம்! ஏழை வலைஞர் குலப் பெண்ணாகிய இவள் என்னை மணந்து கொள்ள மாட்டாளாம். நான் சுகமாயிருந்தால் இவளுக்குப் போதுமாம். வருங்காலத்தில் என்னுடைய மகத்தான வெற்றிகளைக் கேட்டு இவள் மகிழப் போகிறாளாம். எப்படி யிருக்கிறது கதை? உண்மையில் எனக்குச் சித்தப் பிரமையா? இவளுக்கா?"

சேந்தன்அமுதன் ஆச்சாரிய பிக்குவின் காதோடு ஏதோ கூறினான். அதற்கு முன்னாலேயே இளவரசர், சுரவேகத்தினால் நினைவிழந்த நிலையில் பேசுகிறார் என்பதை பிக்கு உணர்ந்திருந்தார். குந்தவை தேவி தம்மிடம் இளவரசருக்கு அடைக்கலம் தரும்படி கேட்டிருந்ததும், அவருக்கு நினைவு வந்தது.

மற்ற பிக்குகளைப் பார்த்து அவர், "இந்தப் பிள்ளைக்கு விஷ சுரம்தான் வந்திருக்கிறது. இவனை வெளியில் அனுப்பினால் இன்னும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வந்துவிடும். இலங்கையில் எத்தனையோ ஆயிரம் பேர் சுரத்தினால் இறந்து போனார்கள்.

ஆகையால் இந்த இளைஞனை என் அறைக்கு அழைத்துப் போய் நானே பணிவிடையும் செய்யப் போகிறேன் இடையில் சுர வேகத்தினால் இவன் ஏதாவது பிதற்றினால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்!" என்றார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## ஒருவரை ஒருவர் குறை கூறுவது தவறு

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒருவர் சலவைத் தொழிலாளி, இன்னொருவர் மண் பானைகள் செய்யும் குயவர். இரண்டு பேருமே அரசரிடம் வேலை பார்த்து வந்தனர்.

ஒரு நாள் இரண்டு பேருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. அவர்கள் தங்கள் குறைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளாமல் அரசரிடம் ஒருவர் பற்றி ஒருவர் குறை கூறிக் கொண்டு இருந்தனர்.

மண்பானை செய்யும் குயவர், சலவை தொழிலாளியை அரசரிடம் வசமாக சிக்க வைக்க வேண்டும் என்று எண்ணி அரசரைப் பார்த்து, "அரசே, நமது பட் டத்து யானை கறுப்பாக இருக்கிறது. யானையை சலவைத் தொழிலாளியிடம் கொடுத்து வெளுக்க செய்ய சொல்லுங்கள்" என்றார்.

அரசர் மிகப்பெரிய முட்டாளாவார். அவர் எதைப் பற்றியும் சிந்திக்காமல் சலவைத் தொழிலாளியை கூப்பிட்டு யானையை வெளுத்து வரும் படி கூறினார். உடனே சலவைத் தொழிலாளி அரசரைப் பார்த்து, "அரசே, யானையை வெளுத்து விடலாம் யானையை வேக வைக்கும் அளவிற்கு பெரிய பானை ஒன்றை குயவரை செய்து தர சொல்லுங்கள்" என்றார்.

அரசர் குயவரை கூப்பிட்டு, "யானையை வேகவைக்க பெரிய பானையை செய்து கொடு" என்று ஆணையிட்டார். குயவர் திரு திரு என விழித்தார்.

இறுதியில் இருவரும் சந்தித்தனர். உன் மேல் நானும், என்மேல் நீயும் குறை கூறி மாட்டிக் கொண்டோம். இதனால் நம் இருவருக்குமே துன்பம். இனி மேல் இது போல் நடக்கக் கூடாது.

நம் தவறுகளை நாமே திருத்திக் கொள் வோம் என்றார்கள். இருவரும் முன்பு போலவே நண்பர்கள் ஆனார்கள்.

நீதி : ஒருவர் மீது ஒருவர் குறை கூறி வம்பில் மாட்டிக் கொண்டு விழிப்பதை விட ஒருவர் மீது மற்றொருவர் குறை கூறுவதை விட்டு அவரவர் குறையை அவரவர் திருத்திக் கொண்டு வாழ்வது சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் சமமாய் இருக்கும் போதே நமது நேர்மையை மற்றவர் உணர்வர். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பொது வேட்பாளரே பிரச்சினையாக மாறலாம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துகின்ற முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

எனினும் யாரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது என்ற வினாவுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

இங்குதான் சம்பந்தப்பட்டவர்கள் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது ஓர் ஆலயத்தில் எல்லோரும் சேர்ந்து ஒரு திருவிழாவை நடத்துவோம் என எண்ணுவது நல்ல விடயம்.

ஆனால் குறித்த பொதுத் திருவிழாவில் தர்ப்பை தரித்து சங்கல்பம் இருப்பது யார் என்ற கேள்வி எழும்.

இங்குதான் குழப்பம் ஆரம்பமாகிறது. அதாவது, ஊரெல்லாம் சேர்ந்து பொது உபயமாக ஒரு திருவிழாவைச் செய்யும்போது, குறித்த நபர் ஒருவருக்குத் தர்ப்பை அணிவித்து, அவரை சங்கல்பத்தில் இருத்தி, திருவிழா நிறைவில் அவருக்கு காளாஞ்சி கொடுக்கும்போது, எதற்காக? அவருக்கு மட்டும் என்ற கேள்வி எழுகை பெறும்.

அந்தக் கேள்வி சந்தர்ப்ப சூழ்நிலைகள் கருதி வெளிப்படையாக எழாவிட்டாலும் பலருடைய ஆழ்மனதில் அதன் அழுக்கம் இருந்து கொண்டே இருக்கும்.

ஆம், இதே நிலைமை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கும் பொருந்திக் கொள்ளும்.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், பொது வேட்பாளராகப் பத்துப் பதினைந்து பேரைத் தேர்வுக்காக எடுத்துவிட்டு, அதலிருந்து ஒருவரைப் பொது வேட்பாளராக்கும்போது ஏனையவர்கள் தம் மளவில் மனம் நோவர்.

தவிர, சிலவேளைகளில் அவர்களில் சிலர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராகவும் செயற்படுவர்.

இது ஒருபுறமிருக்க, பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டவர் சில வேளைகளில் அதற்குத் தனது மறுப்பைத் தெரிவிக்கலாம். அல்லது நிபந்தனைகள் விதிக்கலாம்.

இவ்வாறான சூழ்நிலை ஏற்படும்போது, பொது வேட்பாளர் தேவை என்ற தரப்புக்குள் கருத்து முரண்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும்.

இதைவிட, தேர்தலில் தோற்பது உறுதி என்ற தகவலை முன்கூட்டியே தெரிந்து கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளரிடம் சில எதிர்பார்ப்புகள் இருக்கவே செய்யும்.

உண்மை. ஜனாதிபதித் தேர்தலில் என்னைப் பொது வேட்பாளராகத் தெரிவு செய்தவர்கள் நிச்சயம் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக என்னை நிறுத்துவர் என்ற எதிர்பார்ப்புக்கூட ஏற்படலாம்.

இந்த எதிர்பார்ப்பை எதிர்காலத்தில் செய்யத் தவறும்போது, பிரஸ்தாபப் பொது வேட்பாளர் ஏற்பாட்டாளர்களுக்கு வில்லங்கமாக அமையலாம்.

ஆகையால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் குறித்து இன்னும் பல தடவைகள் ஆராய்ந்து முடிவெடுப்பது நன்மை பயக்கும்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் போலித் தகவல்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு நாட்டில் உள்ள எந்தவொரு தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும் வாக்களிக்க முடியும் என சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் போலியானவை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் தங்களது மாவட்டத்திற்குரிய தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதன் மூலமும், தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர் தங்களது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் முன்னிலையில் வாக்களிப்பதன் மூலமும் தேர்தல் சட்டத்தின்படி வாக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் முகவரிக்கு (வாக்காளரின் பெயர், வாக்கெடுப்பு நிலையம், தேர்தல் நடைபெறும் திகதி, நேரம்) என்பன அடங்கிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்படும்.

எனவே, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வெளியீடு இன்றி சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் போலியானவை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

32 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், வாரியபொல, கட்டுபொத்த பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய வர்த்தகரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை காலை 09.25 மணியளவில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபர், விமான நிலையத்தின் அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முடித்துவிட்டு விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மீண்டும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து 21,600 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 108 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

திருகோணமலையில்

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது

*(திருகோணமலை)*

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கந்தளாய் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈச்சிலம்பற்று பகுதியில் வசிக்கும் 45 மற்றும் 46 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நீரில் மூழ்கிய இளைஞன் மரணம்

சமனல குளம் அணைக்கட்டுக்கு அருகில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ கொலிஞ்சாடிய பகுதியைச் சேர்ந்த உடகம மனன்னலகே கமல் பெர்சரா என்ற 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கொரிய பரீட்சைக்கு தோற்றி அதில் சித்தியடைந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சமனல ஏரி அணைக்கட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் இளைஞர்கள் குழுவொன்று ஆசிரியருடன் நீராட சென்றுள்ளனர்.

இதன்போது நீராடச் சென்று காணாமல் போன நிலையில், அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## கனடாவில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி பண மோசடி

### சந்தேக நபர் கைது

கனடாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பல மில்லியன் ரூபா மோசடி செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மோசடிகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரின் 011 2864 241 அல்லது 011 2864 123 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## இயேசு முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு

கரவெட்டி குழந்தை இயேசு முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வதிரி திரு இருதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். முன்பள்ளி அதிபர் அருட்சகோதரி எம்.ரூபினி அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு நிகழ்வில் ஹரி இன்சினியரின் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.யாதவன் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02

**ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள்**

இச் சட்டங்களில் உள்ளடங்கிய பகுதிகளாக வாக்காளர்கள் வாக்குகளை பிரயோகிக்கும் முறை, வாக்குச்சீட்டில் புள்ளடி இடும் முறை, வாக்கெடுப்பு நிலையத்திற்கு பதிலாக பிறிதோர் இடத்தில் வாக்களிக்க விரும்பின் எடுக்க வேண்டிய நடவடிக்கை. வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்குதல், வாக்கெடுப்பு நிலையத்திற்கான முகவர் செயற்படவேண்டிய முறை, தேர்தல் குற்றங்கள், தேர்தல் சட்டத்திற்கு அமைய தவறுகள், வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் நாளில் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள், ஊர்வலங்கள், பிரசாரங்கள்; பொதுக்கூட்டங்கள் எவ்வாறு நடாத்தப்படும் என்ற அறிவுறுத்தல், வேட்பாளர்கள் தமது தேர்தல் காரியாலயங்களை அமைத்தல் மற்றும் செயற்படுத்தும் முறை, தேர்தல் சின்னங்களைக் காட்சிக்கு வைப்பதில் உள்ள கட்டுப்பாடு, வாக்களிக்கும்படி மக்களிடம் இரந்து கேட்டல், தேர்தல்களில் இரகசியம் பேணல், ஊழல் குற்றங்கள் மற்றும் பழக்கங்கள், ஆள்மாறாட்டம் செய்தல், ஒருவருக்கு உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு, இலஞ்சம் வழங்குதல், ஊழல் நடவடிக்கைகளுக்கான தண்டனைகள், சட்ட விரோதமான நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல் போன்றவை இதில் உள்ளடங்கியுள்ளன.

**உபசாரம் செய்தல்**
**(சட்டப் பிரிவு-77)**

ஒரு வேட்பாளர் தாமாகவோ அல்லது பிறிதொருவர் மூலமாகவோ தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் நடைபெறும் தினம் ஒரு வாக்காளரை 1) வாக்களிக்க செய்தல் அல்லது வாக்களிக்காதிருக்கச் செய்தல் போன்ற விடயங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவ் வாக்காளர் எவருக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் அல்லது பெற்றுக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் செய்கையில் ஈடுபடும் ஆளெவரும் உபசாரம் செய்யும் தவறுக்காக குற்றவாளியாகின்றார். மேலும் இவ் விடயங்கள் தேர்தலுக்குப் பின்னர் தெரியவந்தாலும் அவ் வேட்பாளர் அத்தவறுக்காக குற்றவாளியாகின்றார்.

**தகாத செல்வாக்கு சட்டப்**
**(பிரிவு - 78)**

வாக்கை அளிக்க, வாக்கை அளிக்காமலிருக்க அவ்வாறன்றேல் வாக்காளர் ஒருவரின் வர்க்குரிமையை சுதந்திரமாகப் பிரயோகிக்க இடையூறு விளைவிக்கின்றவாறான எந்தவொரு தூண்டுதல், வற்புறுத்தல், அழுத்தம்கொடுத்தல், பயமுறுத்தல், கடத்திச்செல்லல், அச்சுறுத்தல் விடுத்தல், மோசடிச் செயல், ஆன்மிக சேதமொன்றையோ நட்டமொன்றையோ விளைவிக்கின்ற அல்லது அவ்வாறு விளைவிக்கப்போவதாக அச்சுறுத்துகின்ற ஆளெவரும் தகாத செல்வாக்கு என்ற தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி தேர்தல் வாக்கெடுப்புத் திகதியை அடுத்து வரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியில் அதனுடன் தொடர்பான பின்வரும் விடயங்கள் தடைசெய்யப்பட்டவையாகும்.

1) சமயக் கூட்டமொன்றில் தேர்தல் முடிவில் மாற்றம் உண்டு பண்ணும்படியான செல்வாக்கைப் பிரயோகிக்க அல்லது அரசியல் கட்சியொன்றுக்கு/ குழுவென்றுக்கு வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காதிருக்கும்படி தூண்டுவதற்கு எவையேனும் சொற்களை உரைத்தல்.

2) சமயக் கூட்டமொன்றில் மேற்சொன்ன கருமத்திற்காக பிரசுரங்கள், வேட்பாளர் ஒருவரின் புகைப்படம், சின்னம் முதலியவற்றை விநியோகித்தல் அல்லது காட்சிப்படுத்தல்.

3) மத வழிபாட்டுத் தலமொன்றில் தேர்தல் இயக்கத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்திற்காக பொதுக் கூட்டமொன்றை நடத்துதல்.

4) சமய பணித்துறை அமைப்பொன்றின் அங்கத்தவர் ஒருவரால் / அலுவலர் ஒருவரால் சொல்லப்பட்ட சமயத்தைச் சார்ந்த வாக்காளர் எவரேனும் வாக்கை அளித்த அல்லது அளிக்காதிருந்த விதத்தின் பேரில், தேர்தலின் போது உதவியாகவும் உடந்தையாகவும் இருந்ததன் பேரில், அவ்வாறன்றேல் அவ்வாறான ஒரு கருமத்திற்குத் தூண்டுவதற்காக சொல்லப்பட்ட பற்றாளருக்கு அல்லது அத்தகைய உறுப்பினருக்கு வழங்கப்படும் யாதேனுமொரு சமய சேவை அல்லது நலனுதவியை அளிப்பதை மறுத்தல் அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்துதல். சொல்லப்பட்ட பற்றாளரை அத்தகைய சமய பணித்துறை அமைப்பிலிருந்து வெளியேற்றுவதாக அச்சுறுத்துதல்.

5) தொழில்தருநர் எவராலும் குறித்த தொழிலில் ஈடுபடும் வாக்காளர் எவரேனும் வாக்களித்த அல்லது அவ்வாறு வாக்களிக்காதிருந்த விதத்தின் பேரில், தேர்தலில் உதவியும் உடந்தையும் அளித்த விதத்தின் பேரில், அவ்வாறன்றேல் அவ்வாறான ஒரு கருமத்திற்குத் தூண்டுவதற்காக தொழிலிலிருந்து விலக்குதல் அல்லது அவ்வாறு தொழிலிலிருந்து விலக்குவதாக அச்சுறுத்துதல்.

அதுவரை பெற்ற அல்லது எதிர்காலத்தில் உரித்தாவதற்கிருந்த நலனுதவிகளை வழங்காதிருத்தல் அல்லது வழங்காதிருக்கப் போவதாக அச்சுறுத்துதல் போன்றவற்றைச் செய்கின்ற ஆளெவரும் தகாத செல்வாக்கு என்ற தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

**தேர்தல் மனுக்கள்**

தேர்தல் மனுக்கள் வாக்கெடுப்பு உரிய முறையில் நடைபெறவில்லை என்றும், தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினாலோ அல்லது அவர்களின் முகவர்களினாலோ வாக்கெடுப்பு தொடர்பான ஊழல் பழக்கங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் வாக்கெடுப்பை இரத்துச் செய்யுமாறு தேர்தல் மனுவொன்றின் மூலம் கோர முடியும். அது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

மனுவொன்றைத் தாக்கல் செய்வதற்கு அவசியமான காரணிகளாக இலஞ்சம் வழங்குதல், உபசாரம் செய்தல், பொதுவான அச்சுறுத்தல் அல்லது வேறு பிறழ்நடத்தைகள் காரணமாக வாக்காளரக்ளில் யாதேனுமொரு பிரிவினருக்கு அவர்களின் விருப்பின்படி வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருக்க நேரிட்டதன் காரணமாக தேர்தல் முடிவுகள் மீது பாதிப்பொன்று ஏற்பட்டிருத்தல். தேர்தல் தொடர்பான சட்டத்தின்படி அது நடாத்தப்படாமை காரணமாக முடிவுகள் மீது பாதிப்பொன்று ஏற்பட்டிருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் முறை**

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்படும் வாக்குச் சீட்டில் அபேட்சகர்களின் பெயர்கள் சிங்கள அகர வரிசைக் கிணங்கமும் மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கும். அபேட்சகர்களின் பெயருடன் கட்சியின் சின்னம் அல்லது சுயேட்சை அபேட்சகராயின் அவருக்கு வழங்கப்பட்ட சின்னம் இரண்டாம் நிரலில் அச்சிடப்பட்டிருக்கும். வாக்களிப்பதற்கான இடம் 3ஆம் நிரலில் ஒதுக்கப்பட்டிருக்கும். வாக்காளர்கள் வாக்களிக்கும் போது ஏனைய தேர்தல்கள் போன்று புள்ளடி (X) இடத்தேவையில்லை. தங்களின் விருப்பத்திற்கு அமைய 1 ஆம், 2 ஆம், 3 ஆம் விருப்பங்களைப் பதியலாம்.

இலங்கைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலில் 2 வேட்பாளர்கள் மாத்திரம் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் தமது விருப்பத்தை ஒரு வேட்பாளருக்கும், 3 வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடின் அந்த மூன்று வேட்பாளர்களில் யாரை முதலாவதாகவும் யாரை இரண்டாவதாகவும் தெரிவு செய்ய விரும்புகின்றார்கள் என்று 1, 2 என்று இலக்கமிடுவதன் மூலம் காட்டவேண்டும்.

வேட்பாளர்கள் மூவருக்கு மேல் போட்டியிடின் அந்த வேட்பாளர்களில் யாரை முதலாவதாக யாரை இரண்டாவதாக யாரை மூன்றாவதாக தெரிவுசெய்ய விரும்புகின்றார்கள் என்று 1,2,3 என்று இலக்கமிடுவதன் மூலம் காட்ட வேண்டும்.

வாக்களிக்கும்போது ஒரு புள்ளடி (X) மட்டும் இட்டால் அந்தப் புள்ளடி யாருக்கு இடப்பட்டதோ அவருக்கான விருப்பத் தேர்வாக கருதப்படும். (கடைசி ஜனாதிபதி தேர்தலில் புள்ளடியிடுவது தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது) ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளடியோ அல்லது புள்ளடியும், இலக்கம் 1 ஆம் பாவிக்கப்பட்டால் அந்த வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படும்.

**ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் முறை**

1) இரண்டு பேர் மட்டும் போட்டியிடும் போது வாக்களிக்கும் முறை - படம்1

2) மூன்று பேர் மட்டும் போட்டியிடும் போது வாக்களிக்கும் முறை- படம் 2

3) மூன்றுபேருக்குமேல் போட்டியிடும் போது வாக்களிக்கும் முறை - படம் 3

ஜனாதிபதித்தேர்தல் வாக்குச் சீட்டில் பொதுவாக மூன்று நிரல்கள் காணப்படும்.
அவை பின்வருமாறு அமைந்திருக்கும்.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக் கிணற்றில்...

தந்தையே சடலமாக மீட்கப்பட்டவரா வார்.

வீட்டில் உள்ளோர் யாழ்ப்பாணத்தில் உள்ள மரணச் சடங்குக்குச் சென்ற தாகவும் மேற்படி குடும்பஸ்தரும் மரணச் சடங்கு சென்று விட்டு 31 ஆம் திகதி வீடு வந்துள்ளார். ஞாயிற்றுக் கிழமை ஏனையோர் வீட்டிற்கு வந்து இரவு கிணற்றில் தண்ணீர் எடுக்க மகள் சென்றபோது அவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு நேற்று சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசா ரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளை பருத்தித்துறை பொலி ஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

## மானிப்பாயில்...

மானிப்பாய்ப் பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப் புப் பிரிவு பொலிஸாரால் நேற்றைய தினம் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியானவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (ம-7,33)

## மறைத்து...

ஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவ லின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து மேலதிக விசாரணை களை சுன்னாகம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

## பதவியை...

பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து நேற்று மதியம் தனது பதவியை ராஜி னாமாச் செய்தார்.

இதையடுத்து, பங்களாதேஷில் இருந்து மதியம் 2.30 மணிக்கு அந் நாட்டு இராணுவ விமானத்தில் தனது சகோதரி ஹேக் ரேஹானாவுடன் கன பாபன் என்ற இடத்தில் இருந்து புறப் பட்டார்.

அவர்கள் புறப்பட்ட விமானம் திரிபுரா வழியாக புதுடெல்லி நோக்கி சென்றதாகத் தகவல் வெளியானது.

இந்நிலையில், அவர்கள் இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதாக பிரிஜ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## விண்ணப்பம்...

அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

தபாலில் ஏற்படக்கூடிய தாமதம் மற்றும் ஆணைக்குழுவிடம் விடுக்கப் பட்ட கோரிக்கையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளது.

அதன்படி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, விண்ணப்பங்களை ஏற் றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அதாவது, ஓகஸ்ட் 9ஆம் திகதி நள்ளி ரவு 12 மணிக்குள் உரிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களை வந்தடைய வேண்டும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கட்டுப்பணம்...

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித் துள்ளது.

இதன்படி ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஓஷல ஹேரத், ஏ. எஸ். பி. லியனகே, சஜித் பிரேமதாச, பி. டபிள்யூ. எஸ். கே. பண்டாரநாயக்க, விஜயதாச ராஜபக்ஷ, கே.கே. பியதாச, சிறிதுங்க ஜயசூரிய, அஜந்த டி சொய்சா, கே. ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர, வணக்கத்துக்குரிய பத்தர முல்லே சீலரதன தேரர் மற்றும் அக் மீமன தயாரதன தேரர் ஆகியோர் கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ள னர்.

இதேவேளை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்றுப்பிற்பகல் சுயேட்சை வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தி னார்.

ஐக்கிய தொழிற்சங்க மையத்தின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்கவும் சுயேட்சை வேட்பாளராக நேற்று கட் டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

மேலும், அருணலு மக்கள் முன்னணி சார்பில் அதன் செயலாளர் வைத்தியர் கே.ஆர். கிஷான் ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிடுவதற்காக கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளார். (ம-7)

## தேர்தல் சட்ட...

கங்களுக்காக சில அரச நிறுவனங் களின் சிரேஷ்ட பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை, பூர ணப்படுத்தப்படாத அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அங்குரார்ப் பணம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரணிலுடன் டீல்...

பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள் ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நேற்றுத் திங் கட்கிழமை பொது ஜன பெரமுன வின் காரியால யத்தில் இடம் பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங் களுக்குக் கருத் துத் தெரிவிக்கை யில் மேற்கண்ட வாறு குறிப்பிட் டார்.

கட்சியின் நிறைவேற்றுக் குழு ஏகமனதாக எடுத்த தீர்மானத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சி யின் உறுப்பினர் கள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆத ரவு வழங்குவதா கக் குறிப்பிடு கிறார்கள். நிறை வேற்றுக் குழு கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவு வழங்கி விட்டு மக்கள் மத் தியில் பொய்யாக விமர்சிப்பது பய னற்றது.

பொதுஜனபெர முனவை விட்டு சென்றுள்ளவர்கள் மீண்டும் எம்மு டன் ஒன்றிணை வார்கள். முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ "சலூன் கதவு" திறந்துள்ளது என்று குறிப்பிடு வார். ஆகவே விலகிச் செல் பவர்களை பல வந்தமாக தடுத்து நிறுத்த முடி யாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளை பிளவுபடுத்து வதில் திறமையானவர். கொள் கைகளை முன்னிலைப்படுத்தி கட்சி யுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெ டுக்காமல், தனிப்பட்ட முறையில் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு கட்சிகளை பிளவுபடுத்துவது ஜனாதிபதியின் செயற்பாடாகும்.

ஜனாதிபதிக்கும், எமக்குமிடையில் எவ்வித டீல் அரசியலும் கிடையாது. கட்சியின் கொள்கைக்கு அமைய நாங்கள் தீர்மானம் எடுத்தோம். கட்சி யின் உறுப்பினரல்லாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கு வது சாத்தியமற்றது. எமது ஜனாதிபதி வேட்பாளரை இன்று அறிவிப்போம் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 5556 — V 3 8 2 5 3 2 — அத சம்பத V 2 5 3 2 — சீட்டிழுப்பு இலக்கம் 131
தன நிதானய — திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1586 — E 04 55 68 82 E — 77161
மெகா பவர் — திகதி 05/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1904 — O 06 08 18 33 39 — 36540
லக்சி 7 VIP — திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0382 — Y 8 4 4 9 0 7 Y
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3798 — சீட்டிழுப்பு திகதி 05.08.2024 — Q 10 14 49 77 — Q 00835
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0865 — சிம்மம் 04 38 42 59 சிம்மம் — 79818 — 16
உத்தியோகபூர்வ முடிவுகள் — 05.08.2024 — வெற்றி வாரம் 264 — வர்ணம் ஊதா — E 3 8 9 5 4 6 — 59460 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,018,904.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2530 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 05.08.2024 — தினம் திங்கள் — 09 29 37 75 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,196,892.80
சனிதா — திகதி 2024.08.05 — வெற்றி வாரம் 4891 — 04 22 64 69 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,481,960.00 — 37698
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4242 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.05 — தினம் திங்கட்கிழமை — 05 13 20 28 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,217,208.40 — 231122
S 10 01 15 27 34 — 1706 — பச்சை — 05.08.2024 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 537,255,008.20
ஜயோதா — திகதி 2024.08.05 — வெற்றி வாரம் 2048 — 19 37 48 66 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,706,333.20
அட கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2356 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 56,287,519.20 — 13 49 56 63 N — 568204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-936)

076 825 7716 (ஆகாஸ்)

# அரசின் இரு திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் மற்றும் உறுமய காணி உறுதித் திட்டம் ஆகிய இரண்டு முக்கிய அரசாங்கத் திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு இலங்கை தேர்தல்கள் ஆணை குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை இந்த வேலைத்திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக நாட்டின் தேர்தல் பிரதம அதிகாரி தெரிவித்தார்.(ம)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0937)

# காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் A9 வீதியில் 190 இல் 03 பரப்புக் காணி அவசர தேவை கருதி மலிவான விலைக்கு விற்பனைக்குண்டு.

077 940 0963 (C-939)

# வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684 (230)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0937)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

# வேலை வாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Tourist Hotel & Restaurant இற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு
076 830 3931 (1628)

# பணிப்பெண் தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 436 6423 (C-934)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0937)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 10.08.2024)
(AA 2, AA 3 - 24.08.2024)
G. C. E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (10.08.2024)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (14.09.2024)
(C-935)
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917

# வீடு வாடகைக்கு தேவை

இலாப நோக்கமற்ற நிறுவனமொன்றிற்கு 3 - 5 அறைகள் மற்றும் சமையலறை வீட்டுடன் சேர்ந்த குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
இடங்கள்: யாழ். நகரை அண்டிய பகுதி, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, மானிப்பாய்

தொடர்புகளுக்கு
077 912 8452 (1635)

# பணியாளர் தேவை

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் முழுநேரப் பணியாளராக கடமையாற்றுவதற்கு (ஆண்) பணியாளர் இருவர் தேவை.

தொடர்புகளுக்கு
077 990 5818 (C-938)

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 - 02 - 1957

மறைவு 02 - 08 - 2024

## நடராஜா ஜெயபாலன்

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஜெயபாலன் 02.08.2024 வெள்ளிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - திலகவதி தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான மதியாபரணம் - பவளரட்ணம் தம்பதியினரின் மருமகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் நிருஜாவின் பாசமிகு தந்தையும் சற்குணகுமாரி, சிவபாலன், சாந்தகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

12, சங்கிலியன் வீதி,
நல்லூர். (1630)

தகவல் :
குடும்பத்தினர்

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத ஆடைத் தள்ளுபடி
திருமணப் பட்டுச்சாறிகள்
கொட்டன் சாறிகள் சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...
இன்று மட்டுமே



இன்று மட்டுமே (229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.